Kantonsspital Baden
Ort der Gesundheit

Kantonsspital Baden AG
CH-5404 Baden
www.ksb.ch

# KSB வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைக்கு முன்பும் பின்பும்

மரணவெகலந்திர மாக பட்டெம்

**Anästhesie**
Sprechstunde
Direkt +41 56 486 31 46
ipas.chirurgie@ksb.ch

## அன்பான பெற்றோரே மற்றும் பிள்ளைகளே

மயக்குவிக்கும் நடைமுறையில் ஏற்படக்கூடிய பாதகமானவிளைவுகள் அல்லது பிரச்சினை-களைதவிர்த்துக்கொள்ளஉங்கள் செயற்பாட்டின் மூலம் ஒத்துழைக்க முடியும். பின்வரும் பாதுகாப்பு அறிவுறுததல்களைக் கவனத்தில் எடுப்பதனூடாக இடையில் ஏற்படக்கூடிய தடங்கல்களிலிருந்து முற்பாதுகாத்துக்கொள்ள தயவுசெய்து நீங்கள் உதவிசெய்யுங்கள்.

## உணவு உட்கொள்ளாதிருத்தல்

குறுகிய நேரம் உணவு உட்கொள்ளாமல் இருப்பது சத்திரசிகிச்சையின் முன்பும் பின்பும் உங்கள் பிள்ளையைதிடகாத்திரமாக வைத்திருக்க உதவும். வேறுவிதமாக தீர்மானிக்கப்பட்டிருந்தால் அன்றி, உணவு உட்கொள்ளாதிருத்தலில்பின்வரும் விதிமுறைகள் அமுலில் இருக்கும்:

### நுவைெசவைவ யஅ ழிநசயவழைளெவயப

- குழந்தைகள் (1 வயது வரையாக)
  - உங்கள் பிள்ளையை இரவில் நித்திரையால் எழுப்பி, வருகைதருவதற்கு 4 மணித்தியாலங்கள் முன்பாகபெட்டிப்பாலை அல்லது வருகைதருவதற்கு 3 மணித்தியாலங்கள் முன்பாக தாய்ப்பாலைக் குடிக்கக் கொடுங்கள்.
  - உங்கள் பிள்ளைக்கு தேனீர்.்.தண்ணீர் குடிக்கும் பழக்கம் இருந்தால், வருவதற்கு ஒரு மணித்திய ாலத்துக்குமுன் ஒன்றும. கலக்காத குடிவை கயை அதாவது இனிப்பான தேனீர்அல்லது தண்ணீர் குடிக்க கொடுங்கள்( கொடுக்ககூடாதவை பால்.். தயிர், புளிநதெடுத்த பழங்கள்).
- பிள்ளைகள் (1 வயதிற்கு மேற்பட்டவர்கள்)
  - உங்கள் பிள்ளையை இரவில் நித்திரையால் எழுப்பி, வருகைதருவதற்கு 1 மணித்தியாலங்கள் முன்பாகசுவையூட்டிய தேனீர் அல்லது தண்ணீரை குடிக்கக் கொடுங்கள்(பால்.்.பால்பொருள் சேர்க்காது)
  - ஆகக்கூடியது 200 அட பால் .்.சொக்கிளேட்பால் கொடுப்பது, வருவதற்கு 4 மணித்தியாலத்துக்கு முன்கொடுக்கலாம்
  - இறுக்கமான உணவுவகை பொருட்களை வருகைதருவதற்கு 6 மணித்தியாலங்கள் முன்பாக உண்ணஅனுமதியுண்டு.

### சத்திரசிகிச்சைக்கு ஒரு நாள் முன்பாக வருகைதரல்:

- வேறு விதமாகதீர்மானிக்கப்பட்டிருந்தால் அன்றி, உங்கள் பிள்ளை உணவு உட்கொள்ளாது வர வேண்டியஅவசியமில்லை.

## சொந்தமாகப் பாவிக்கும் மருந்துகள்

வருகைதரும் நாள் அன்று உங்கள் பிள்ளை வழமையாகப்பாவிக்கும் அனைத்து மருந்துகளையும் எடுத்து வாருங்கள். உங்கள் பிள்ளை காலையில்எடுக்கும் அவருக்குரிய மருந்துகளை பின்வருமாறு கொடுங்கள்.

மாரங்களும்:

______________________________

______________________________

______________________________

______________________________

## தொற்றுநோய் தடுப்பு மருந்துகள்

தொற்றுநோய் தடுப்பு மருந்துகள் பக்க விளைவுகளை ஏற்படுத்தக்கூடியவை மற்றும் உங்கள் பிள்ளையின் வழமையான நிலைமையைப் பாதிக்கக்கூடியவை. ஆகவே தொற்றுநோய் தடுப்பு மருந்து எடுப்பதற்கும் சத்திரசிகிச்சைக்கும் அதாவது மயக்குவதற்கும் இடையே ஒரு பாதுகாப்பான இடைவெளிக்காலம் வைத்துக் கொள்ளுமாறு பரிந்துரைக்கப்படுகின்றது:

- கூவைக்கட்டு, சின்னமுத்து, அம்மை, பொக்கிளிப்பான் (வாறிசெலென்), செங்காமாரிக்கு எதிரான தடுப்பு மருந்துஎடுத்து 3 கிழமைக்குப் பின்பாக
- தொண்டைக்கரப்பன், ஏற்பு (ரெற்றானுஸ்), குக்கல்(பேர்றுாசிசிஸ்), இளம்பிள்ளைவாதம் (போலியோமெலிற்றிஸ்), கெமோபிலியுஸ் இன்புலெனசா ரகம் டி, மஞ்சள் காமாளை ய.்.டி, கூமானெ பாப்பிலோமாவியறென், தடிமன் காய்ச்சல்(இன்புலென்சா), புனொய்மோகோக்கென், மெனிங்கொகோக்கென், கோடைகால ஆரம்பத்தில்-மெனிங்கோசெப்பலிற்றிஸ், அல்லது விசர் நாய்க்கடிக்கு எதிரான தடுப்பு மருந்து எடுத்து 1 கிழமையின் பின்பாக

உங்கள் பிள்ளையின் சத்திரசிகிச்சைக்கான திகதி, நோய் தடுப்பு மருந்து எடுத்த பின்பு இவ்வகையான பாதுகாப்பு இடைவெளிக்காலத்திற்கு உள்ளாக வருமாக இருந்தால், சத்திரசிகிசைத் திகதியை மாற்றியமைப்பதற்கு வசதியாக எமக்கு அறிவித்துக் கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக்கொள்கிறோம். இருப்பினும் இந்த தொற்றுநோய் தடுப்பு மருந்து வழங்குதல் திட்டமிட்டபடி மேற்கொள்ளப்பட வேண்டும். சத்திரசிகிச்சை .். மயக்கியதன் பின்பு அடுத்த தொற்றுநோய் தடுப்பு மருந்தைப் பெறுவதற்கு 1 கிழமை பாதுகாப்புக் காலஇடைவெளி வைத்துக் கொள்ளுமாறு பரிந்துரைக்கப்படுகின்றது.

8 0 0 0 0 0 0 4 9 2

KS_B Kantonsspital Baden
Ort der Gesundheit

Kantonsspital Baden AG
CH-5404 Baden
www.ksb.ch

## நகைகள், பெறுமதியான பொருட்கள் மற்றும் பார்வைக்கான உதவிகள்

- நகைகள் மற்றும் வேறு பெறுமதியான பொருட்களை வீட்டில் விட்டுவிடுங்கள்.
- விளையாடும் எலக்ரோனிக் கருவிகள் வைத்தியசாலையில் நேரம் போக்குவதற்கு உகந்தவை, ஆனால் இலகுவாககாணமற்போகக் கூடியவை. ஆகவே அவதானத்துடன் முடிவெடுங்கள். பெரிய பிள்ளைகளைப் பொறுத்தவரை பகுதிரீதியாக மயக்குவதற்குத் திட்டமிட்டிருந்தால், பாடல் கேட்கும் ஒரு கருவியை (MP3-Player, Flight Mode for Smartphones) சத்திரசிகிச்சை நிலையத்திற்கு எடுத்துச் செல்லலாம். அவை தொலைந்தாலோ அல்லதுபாதிப்படைந்தாலோ எவ்வித நட்டஈடும் வழங்கப்பட மாட்டாது.
- உடம்பில் குத்தியிருக்கும் உலோகங்களால் எரிகாயங்கள் ஏற்படலாம். கழற்றக்கூடியவற்றை வீட்டில் விட்டுவிடுங்கள்.அப்படியில்லாவிடின் வைத்தியரிடம் இதுபற்றி அறிவித்துக் கொள்ளுங்கள்.
- தயவுசெய்து உங்கள் பிள்ளை முக அலங்காரங்கள் இடாமல் சத்திரசிகிச்சை நிலையத்திற்கு வருவதை கவனித்துக்கொள்ளுங்கள்.
- கண்ணாடி மற்றும் செயற்கைக் கண்வில்லைகள் (Contact Lenses) சத்திரசிகிச்சை அறைகளுக்குள் எடுத்து வரமுடியாது, ஆனால் விதிவிலக்காக பார்வை மிகவும் குன்றிய பெரிய பிள்ளைகளுக்கு சத்திரசிகிச்சை அறைகளுக்குள்எடுத்து வர அனுமதியுண்டு. அவை தொலைந்தாலோ அல்லது பாதிப்படைந்தாலோ எவ்வித நட்டஈடும் வழங்கப்படமாட்டாது.

## நுசத்திரசிகிச்சை நிலையத்திற்கு பெற்றோர் துணையாக செல்லுதல்

KSB வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் வசதியின்படி, பெற்றோரில் ஒருவர் தமது பிள்ளைக்குத்துணையாக சத்திரசிகிச்சைப் பகுதிக்கு சேர்ந்து செல்ல அனுமதியுண்டு. பெற்றோரில் ஒருவர் துணையாக இருப்பது அநேகமாக பிள்ளைகளை அமைதிப்படுத்தும். உங்கள் பிள்ளை நித்திரையானதும் அங்குள்ள தாதியின் துணையுடன் அந்த நிலையத்தை விட்டு வெளியேறுங்கள், இதன்மூலம் சத்திர சிகிச்சைக்குழு எவ்வித தடைகளுமின்றி தமது கடமைகளை நிறைவேற்ற முடியும். பெற்றோர் துணையாகச் செல்லுதல் குறித்த மேலதிக விபரங்களை இது குறித்த விசேட கைநூலான „சத்திரசிகிச்சை நிலையத்திற்கு பெற்றோர் துணையாகச் செல்லுதல்“ என்பதில் காணலாம். அவசரசிகிச்சையின்போது மற்றும் ஒரு வயதிற்கு உட்பட்ட பிள்ளைகளுடன் துணையாகச் செல்ல அனுமதியில்லை.

## வருகை தரும் நாளில்

- தயவுசெய்து வயதிற்கு ஏற்றபடி விளையாட்டுப் பொருட்கள், மெதுமையான பொம்மைகள், உடைகள், பால்மா மற்றும்சூப்பி போன்றவற்றை எடுத்து வாருங்கள்.
- உணவு உண்ணாது இருத்தல் மற்றும் உடல் நல நிலைமை குறித்து தாதிகள் பரிசோதிப்பர் அத்துடன் வழமையானமருத்துவ அளவீடுகளை (இரத்த அழுத்தம், உடல் நிறை போன்றவற்றை) மேற்கொள்வர்.
- வழமைப்படி உங்கள் பிள்ளைக்கு சத்திரசிகிச்சைக்கு முன்பாக அமைதிப்படுத்தும் சாறு ஒன்று வழங்கப்படும்.

## சத்திரசிகிச்சையின் பின்

- சத்திரசிகிச்சையின் பின் உங்கள் பிள்ளை, விழித்தெழும் அறையில் மிகவும் அவதானமான கண்காணிப்பில் இருக்கவேண்டியிருக்கும்.
- இந்த நேரத்தின்போது பெற்றோரில் ஒருவர் விழித்தெழும் அறையிலும் அதன்பின் பிள்ளைகள் வைத்தியநிலையத்திற்கு மாறிக்கொள்ளும் வரையும் துணையாக இருந்து கொள்ளலாம்.
- உங்களது பிள்ளையின் முதல்முறையான நடைப்பயிற்சிக்கு ஒரு மருத்துவப் பராமரிப்பு நபர் உதவிபுரிவார். தயவுசெய்துதகுந்த அறிவுறுத்தல்கள் மற்றும் அவர்களது உதவிக்காகக் காத்திருங்கள

## அவசர பிரிவில சததிரசிகிசசை இடமபெறறால அதனபின நடநதுகொளள வேடிய முறைகள

- சத்திரசிகிச்சையின் தன்மையைப் பொறுத்து, உங்கள் பிள்ளை அதே நாளில் வீட்டிற்கு செல்ல அனுமதி உண்டு.
- வெளியேறுவது மாலை முடிவு வரை தாமதமாகலாம் என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளுங்கள்.
- வெளியேறுவதற்கு பின்வரும் விடயங்கள் நிறைவுபெற்றிருக்க வேண்டும்: வயதிற்கேற்றபடி விழித்திருக்கும் தன்மை, பிரச்சினைகள் எதுவுமற்ற நடமாட்டம், சாதாரணமாக உணவு உட்கொள்ளல் வாந்தி எதுவுமில்லாது, பாரிய நோவு எதுவுமில்லாதிருத்தல்.
- பிள்ளை சத்திரசிகிச்சையின் பின் வெளியேறி 24 மணித்தியாலங்களுக்கு விளையாட்டு மற்றும் கடினமான உடற் பயிற்சிகளை தவிர்ப்பதை அவதானித்துக் கொள்ளுங்கள்.
- வீட்டில் பிரச்சினைகள் ஏற்பட்டால்: கடுமையான வலி, குமட்டல், உடல்நலக்குறைவு போன்ற பிரச்சினைகள் வீட்டில் ஏற்பட்டால் அல்லது இரத்தப்போக்கு இருப்பதை நீங்கள் உறுதிசெய்தால், பின்வரும் தொலைபேசி இலக்கத்தை 056 486 21 11 (நடுநிலையம் முளுடீ) அழைத்து பிள்ளைகள் வைத்தியநிலையத்தில் சேவையிலுள்ள மேல்நிலை வைத்தியரைத் தொடர்புபடுத்துமாறு கேட்கவும்.

சத்திரசிகிச்சைக்கு முன்பாக உங்கள் பிள்ளைக்கு நோய்ஏற்பட்டால், தயவுசெய்து மயக்குவதற்குப்பொறுப் பானவைத்தியரை 056 486 31 44 இலக்கத்தில் தொடர்புகொண்டு அறிவிக்கவும். தற்சமயம் சத்திரசிகிச்சை தள்ளி வைக்கப்பட்டால், பிள்ளை மீளவும் குணமான பின்னர் சத்திரசிகிச்சை வைத்தியநிலைய செயலாளருக்கு அறியத்தரவும்.

## ஏறறுககொளளுதலமறறும உறுதிபபடுததுதல

மேலுள்ள விதிமுறைகளை வாசிததுதுடன அவறறை விளஙகிககொணடதாக இததாலகையொபபமிடுபவர் உறுதிசெயகிறார். இநத விதிமுறைகளை கவனததில எடுககாததாலஏறபடும பினவிளைவுகளுககு, மாநிலவைததியசாலைடீயனநெ யுபுயை பொறுப்பு கூறமுடியாது.

Baden,

திகதி

நோயாளி/நோயளரின்/ பெற்றோரின் அல்லது சட்டரீதியான பிரதிநிதியின் கையொபபம்